## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி - மாபெரும் பொதுக்கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



மார்ச் 1 கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு, திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டங்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி மற்றும் அணிகளின் சார்பில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவித்துள்ளார். அது வருமாறு:-

| வ எண் | தேதி | இடம் | நிர்வாகம் அணிகள் | செயலாளர்கள் அமைப்பாளர்கள் | பேச்சாளர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 05.03.2025 | தாமரைப் பாக்கம் | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி | சேலம் சுஜாதா உ.யாசர் அராபத் |
| 2 | 05.03.2025 | சேக்காடு | ஆவடி வடக்கு பகுதி | நாராயண பிரசாத் | கரூர் முரளி |
| 3 | 06.03.2025 | காக்களூர் | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | ஆர்.ஜெயசீலன் | சைதை சாதிக் கா.ராஜ ராஜேஸ்வரி |
| 4 | 07.03.2025 | பட்டாபிராம் | ஆவடி மேற்கு பகுதி | பொன். விஜயன் | தமிழன் பிரசன்னா |
| 5 | 08.03.2025 | ஆவடி | ஆவடி தெற்கு பகுதி | கோ. ராஜேந்திரன் | Dr.எழிலன் MLA அ.தா. டெக்சின் ரோமேரியோ |
| 6 | 08.03.2025 | கொசவன் பாளையம் | மாவட்ட இளைஞர் அணி | சுரேஷ்குமார் | வாகை சந்திரசேகர் |
| 7 | 09.03.2025 | ஈக்காடு | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | புஜ்ஜி ராமகிருஷ்ணன் | ஈரோடு இறைவன் க.முல்லை வேந்தன் |
| 8 | 09.03.2025 | ஆவடி | மாநகர இளைஞர் அணி | துர்கா பிரசாத் | ஆடுதுறை உத்திராபதி |
| 9 | 10.03.2025 | திருமுல்லை வாயில் | ஆவடி கிழக்கு பகுதி | பேபி வி சேகர் | ப.தாயகம் கவி MLA |
| 10 | 10.03.2025 | திருமழிசை | திருமழிசை பேரூர் | தி.வே.முனுசாமி | மதிமாறன் |
| 11 | 11.03.2025 | பூவிருந்தவல்லி | மாவட்ட விவசாய தொழிலாளர் அணி | இளையான் | பவானி கண்ணன் |
| 12 | 11.03.2025 | திருநின்றவூர் | திருநின்றவூர் நகரம் | தி.வை.ரவி | V.P.ராஜன் |
| 13 | 12.03.2025 | ஆவடி | ஆவடி மாநகரம் | சண். பிரகாஷ் | அமைச்சர் கோவி.செழியன் |
| 14 | 12.03.2025 | குமணன்சாவடி | பூவிருந்தவல்லி நகரம் | ஜி.ஆர். திருமலை | திண்டுக்கல் ஐ.லியோனி |
| 15 | 13.03.2025 | திருவேற்காடு | திருவேற்காடு நகரம் | NEK. மூர்த்தி | நாஞ்சில் சம்பத் |
| 16 | 13.03.2025 | பூவிருந்தவல்லி | மாவட்ட நெசவாளர் அணி | சண்முகம் | போடி காமராஜ் |
| 17 | 14.03.2025 | வேப்பம்பட்டு | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே.பிரேம் ஆனந்த் | நெல்லிக்குப்பம் புகழேந்தி நா.அருண் |
| 18 | 16.03.2025 | காட்டுப்பாக்கம் | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச. கமலேஷ் | தூத்துக்குடி சரத்பாலா |
| 19 | 17.03.2025 | குத்தம்பாக்கம் | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | டி.தேசிங்கு | புதுக்கோட்டை விஜயா ம.மோகநிதி |
| 20 | 18.03.2025 | ஆவடி | மாவட்ட நிர்வாகம் (செயற்குழு + பொதுக்குழு) | மாவட்ட நிர்வாகம் (செயற்குழு + பொதுக்குழ) | செல்வி. மதிவதனி |

அமைச்சர் **ஆவடி சா.மு.நாசர்**,
செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

---

### சென்னை இராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.42 இலட்சத்தில் கதிரியக்க அதிர்வெண் நீக்கியல் கருவி சேவை!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – நீதியரசர் எஸ்.எஸ்.சுந்தர் தொடங்கி வைத்தனர்!

சென்னை, பிப்.16-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் எஸ்.எஸ். சுந்தர் ஆகியோர் நேற்று (15.02.2025), சென்னை, இராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், அரசு பேராட்சியார் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் (AGOT) நிதியின்கீழ் ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில், கதிரியக்க அதிர்வெண் நீக்கியல் கருவி (*Radio Frequency Ablation Machine*) சேவையினை தொடங்கி வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள்.

பின்பு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.42 இலட்சம் செலவிலான புற்றுநோய் மற்றும் நாள்பட்ட சிகிச்சைக்காக கதிரியக்க அதிர்வெண் நீக்கியல் கருவி சேவை தற்போது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. புற்றுநோய் மற்றும் மூட்டு வலியால் வரும் கடுமையான வலிகளுக்கு உரிய நிவாரண சிகிச்சைகள் 2013 ஆம் ஆண்டு முதல் சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் செய்யப்பட்டு வருகிறது.

நாள்பட்ட வலி என்பது 3 மாதத்திற்கு தொடர்ச்சியாக நிலையாக ஒரே இடத்தில் இருக்கும் வலி. மேலும் கை, கால்களில் ஏற்படும் வலி, எலும்பு மற்றும் மூட்டுகளில் ஏற்படும் வாத நோய், புற்றுநோயால் ஏற்படும் பல வித வலி நோய்களால் அன்றாட வாழ்க்கை முறையில் சோம்பலை ஏற்படுத்தும். தூக்கமின்மையை உண்டாக்கும். தற்கொலை போன்ற உணர்வுகளுக்கு பெரிய அழுத்தத்தை உண்டாக்கும்.

எனவே மருந்து, மாத்திரை, ஊசிகள் மூலம் கட்டுப்படுத்த முடியாத வலிகளுக்கு கதிரியக்க அதிர்வெண் நீக்கம் மூலம் உடம்பில் எந்தவித பாகத்திற்கும் பக்க விளைவுகள் ஏற்படாமல் வலி நிவாரணம் அளிக்க முடியும். ஃப்ளோரோஸ்கோபி என்று சொல்லப்படும் மிக நேரம் எக்ஸ்ரே மூலம் இந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த செயல்முறைகளின் மூலம் தினப் பராமரிப்பு நோயாளிகள் மற்றும் உள் நோயாளிகள் பெரிய அளவில் பயன்பெறுவார்கள். மாதத்திற்கு சுமார் 50 முதல் 60 நோயாளிகள் வரை இந்த சிகிச்சைகள் மூலம் பயனடைய முடியும். இந்த சிகிச்சையானது பொதுவாக, தனியார் மருத்துவமனைகளில் பொதுமக்கள் பெற வேண்டும் என்று சொன்னால், ஒரு நோயாளிக்கு சுமார் ரூ.50,000/ முதல் ரூ.1,00,000/ வரை செலவாகும். ஆனால் இந்தக் கருவிகள் மூலம் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் மயக்கத்துறையில் நாள்பட்ட வலி நிவாரண மையத்தின் மூலம் இந்த சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது.

எனவே இத்தகைய சிறப்புக்குரிய இக்கருவி அரசு பேராட்சியார் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் (AGOT) நிதியின்கீழ் ரூ.42 இலட்சம் செலவில் மாண்பமை நீதியரசர்கள் இம்மருத்துவமனைக்கு தந்து பெரிய அளவில் பயன்பெற உதவியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து, சம்மந்தபட்ட அனைவருக்கும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழுநோய் பரிசோதனை தொடர்பான கேள்விக்கு தொழுநோய் பொறுத்தவரை விழிப்புணர்வு முகாம் 30.01.2025 முதல் 15.02.2025 வரை தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. தொழுநோய் பரிசோதனைகள் 13.02.2025 முதல் 28.02.2025 வரை நடைபெறுகிறது. தொழுநோய் பரிசோதனைகள் 13.02.2025 அன்று மட்டும் 133 வட்டாரங்களிலும், 27 நகரப்பகுதிகளிலும் 3,42,241 வீடுகளில் 10,67,675 பேர் பயன்பெறும் வகையில் பரிசோதனைகள் நடைபெற்றது.

தொழுநோய் பரிசோதனைகளுக்கான அறிகுறிகள் இருப்பவர்களிடம் குறிப்பாக தோலில் உணர்ச்சியற்ற, சிவந்த வெளிர்ந்த தேமல், கண்களை மூட இயலாமை, கை விரல்கள் மடக்கி இருத்தல், கை மற்றும் கால்களில் ஆறாத புண்கள் போன்ற பல்வேறு பாதிப்புகள் உள்ளவர்களை கண்டறிந்து அவர்களிடத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வீடாக தேடிச் சென்று பரிசோதனைகள் செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் நாய்க்கடி, பாம்புக்கடி மருந்துகள் தொடர்பான கேள்விக்கு நாய்க்கடி, பாம்புக்கடிகளுக்கான மருந்து 3 ஆண்டுகளுக்கு முன்னாள் வரை வட்டார மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனைகள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும் தான் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசுப் பொறுப்பேற்றபிறகு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் குறிப்பாக 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களில் *ASV* என்று சொல்லக்கூடிய பாம்புக்கடி மருந்துகளும், *ARV* என்று சொல்லக்கூடிய நாய்க்கடி மருந்துகளும் அனைத்து மருத்துவமனைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு, நான் தினந்தோறும் ஆய்வு மேற்கொள்கிற அனைத்து மருத்துவமனைகளிலும் தொடர்ச்சியாகவே கண்காணித்து வருகிறேன்.

அந்த வகையில்தான் சென்னை, பெரியார்நகர் அரசு மருத்துவமனை இன்றைக்கு 500 புதிய படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வருகின்ற 28.02.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அந்த மருத்துவமனை 1986ல் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத்தான் கட்டப்பட்டது. இந்த அரசு பொருப்பேற்றதற்கு பிறகு கூடுதலாக இன்னும் 200 படுக்கைகள் சேர்த்து 300 படுக்கைகளாக தரம் உயர்த்தப்பட்டது. இப்போது 500 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனையாக கட்டப்பட்டு வருகிறது. மிக விரைவில் வட சென்னையில் 800 படுக்கைகள் கொண்ட ஒரு பிரம்மாண்ட மருத்துவ கட்டமைப்பை அந்த மருத்துவமனை பெறவிருக்கிறது. எனவே அதில் நாய்க்கடி, பாம்புக்கடிக்கான மருந்து ஒட்டுமொத்தமாக இருப்பு என்பது எல்லா இடத்திலும் இருக்கிறது, அந்த வகையில் அங்கேயும் இருக்கிறது.

சென்னை, இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையைப் பொருத்தவரை 2021 மே 7க்கு முன்னாள் தினந்தோருமான புறநோயாளிகளின் எண்ணிக்கை 8,000 ஆக இருந்தது. அது இன்றைக்கு 19,000 ஆக உயர்ந்துள்ளது. இதற்கு காரணம் தற்போது அரசு மருத்துவ சேவையை பொது மக்கள் அதிக அளவு பயன்படுத்த விரும்புகின்றனர் .

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்ற அரசு பேராட்சியார் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் லிங்கேஸ்ரவன், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. தேரணிராஜன், மயக்கவியல் துறை இயக்குநர் மரு. சந்திரசேகரன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

### ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி. எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 20-2-2025 வியாழக்கிழமை, காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 15.02.2025.

**ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

---

### மு.சண்முகம் எம்.பி. - கி.நடராசன் - கோ.சி.வள்ளுவன் பங்கேற்பு!

# தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### நிர்வாகிகளுக்கு இரா.பொன்னுராம் வேண்டுகோள்!

சென்னை, பிப். 16 -

தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று காலை உமாகாந்தன் தலைமையில் நடைபெறுகிறது. இதில் தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி., பொருளாளர் கி.நடராசன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர். இது குறித்து கூட்டுறவு மாநில பொதுச் செயலாளர் இரா.பொன்னுராம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக்கடை தொ.மு.ச.வின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 23.02.2025 ஞாயிறு அன்று காலை 9.00 மணியளவில் சென்னை தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான “கலைஞரகத்தில்” சங்கத் தலைவர் எஸ். உமாகாந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் சிறப்புத் தலைவரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் எம்.பி., பேரவைத் தலைவர் கி.நடராசன், பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் , பேரவை அலுவலகச் செயலாளர் ஆ.சீ.அருணகிரி, மொத்த விற்பனை பண்டகசாலை பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் மற்றும் பேரவை நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் 1. ஊதிய உயர்வு கோரிக்கை தயாரிப்பு , 2. மாநில மாநாடு நடத்துவது ,

3. உறுப்பினர் சேர்த்தல் , 4. மாநில, மாவட்ட நிர்வாகிகள் தேர்வு ,

இவ்வாறு இரா.பொன்னுராம் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 18.2.2025 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள் : 15.02.2025.

**ஏ.கே.எஸ்.விஜயன்,**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி